[1981 பிப்ரவரி 5

பெரணமல்லூர் வட்டாரத்தில் ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

*வினா எண். 194—திரு. பி. எம். வெங்கடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டச் சத்துணவுத் திட்டத்தில் பெரணமல்லூர் வட்டாரம் இடம் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. எம். வெங்கடேசன்: தலைவர் அவர்களே, பெரணமல்லூர் வட்டாரம் ஏற்கெனவே வளர்ச்சியற்ற வட்டாரம். இனியாவது உடனடியாக ஊட்டச் சத்துணவுத் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன்.

தர்மபுரி பேருந்து நிலையம்.

*வினா எண். 195—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் தற்காலிகப் பேருந்து நிலையத்தில் மழை காரணமாக சகதி ஏற்பட்டு பயணிகள் அவதிப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) புதிய பேருந்து நிலையம் அமைக்க ஆரம்பித்து ஓராண்டு காலமாகியும் திறக்கப்படாமல் இருக்கக் காரணமென்ன?

(இ) உடனே திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ), (ஆ) மற்றும் (இ); புதிய பேருந்து நிலையம் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ந் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 5]

திரு. எஸ். அரங்கநாதன்: தலைவர் அவர்களே, பேருந்து நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்கள், அதிலே ஒரு பகுதி மாத்திரம் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது, அது ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே ஆரம்பிக்கப்படும், சீக்கிரம் முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையின் முன் அனுமதியோடு கேள்விநேரம் நீட்டிக்கப்படுகிறது.

லோயர் கேம்ப்—குமுளி மலைச்சாலை.

*வினா எண் 196—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை உள்ள மலைப் பாதையை அகலப்படுத்தி சாலையை புதிதாகப் போடவும் தடுப்புச்சுவர் கட்டவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை உள்ள மலைப் பாதையை அகலப்படுத்தி சாலையை புதிதாகப் போடவும் தடுப்புச் சுவர் போடவும் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால், குறிப்பிட்டுள்ள மலைச்சாலையில் கி. மீ. 74/6-ல் பழுதடைந்திருந்த தடுப்புச்சுவரை ரூ. 52,000 செலவில் பராமரிப்பு நிதியிலிருந்து பழுதுபார்க்கும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள்முடியும் தறுவாயில் உள்ளன.

திரு. ஆர். டி. கோபாலன்: பேரவைத் தலைவரவர்களே, லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை செல்லும் பாதை மிகவும் முக்கியமான பாதை. அங்கே சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வந்த வண்ணம் இருக்கின்றனர். அந்தச் சாலை மிகவும் மோசமாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழகத்திலுள்ள அத்தனை மலைச் சாலைகளும் நல்லமுறையில் இருக்கின்றபொழுது இந்த மலைச்சாலை மட்டும் மோசமான நிலையில் இருப்பதை உணர்ந்து மற்ற மலைச் சாலைகளைப் போன்று இதையும் பராமரிப்பதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.